12 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள திசையன்விளைக்கும்தான் செல்ல வேண்டியுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றால், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக கால்நடை மருந்தகம் திறக்க ஆணையிடுவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என எனது கட்சியின் சார்பாகவும், என் தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 434, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

434—

கனிமப் பாதுகாப்பு

***28280—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்பாறை, மணல் போன்ற கனிமங்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெரும்பான்மையான பகுதிகள் மலைப் பகுதி பாதுகாப்பு குழுமத்தின்கீழ் வருகின்றன. மேலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படியும், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்தின் குறிப்பாணையின்படியும், குவாரிகளிலிருந்து எடுப்பதற்கு முன்பாக சுற்றுச்சூழல் துறையின் தடையில்லாச் சான்று பெறப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்ட எல்லையில் காவல் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, கனிமங்கள், பாறைக் கற்கள், மண் மற்றும் மணல் ஆகியவற்றை அனுமதியின்றி எடுத்துச் செல்வதை முற்றிலும் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிம வளங்கள் முழுவதையும்

பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், வளம் நிறைந்த மாவட்டம். காடு வளர்ந்தால்தான் நாடு வளரும் என்று சொல்வார்கள். இங்கு இயற்கை வளம் அழிக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், பல ஆண்டுகளாக, பெரிய கற்பாறைகளை உடைத்து, M–sand–கற்பொடிகளை கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கேரளாவிற்குக் கொண்டு செல்கிறார்கள். ஆனால், அதற்கு அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. தொடர்ந்து அனுமதி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டால், கன்னியாகுமரி மாவட்டத்தின் வளம் அழிந்து போகும். இப்பொழுது மழை இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாதவாறு, மண் அள்ள அனுமதி கொடுக்கப்பட்ட பெரிய குவாரிகளின் செயல்பாடுகளை நிறுத்த வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்ணுக்குள்ளே இருக்கின்ற பாறைகளை உடைத்து வீடு கட்டுவதற்கும், மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால், தொடர்ந்து பெரிய கற்பாறைகள் உடைக்கப்பட்டால், கன்னியாகுமரி மாவட்டத்தின் வளம் மிகவும் மோசமான நிலைக்குப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே மணல் குவாரிகள் இல்லை. மக்கள் மணல் அள்ளுவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இந்த மணலை எடுத்து மக்கள் பணிகளுக்குப் பயன்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்குத் தொடர்ச்சி மலைகளின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், உயிரினங்களைப் பாதுகாக்கவும், அரிய மூலிகைகளைப் பாதுகாக்கவும் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருகின்றன. ஆனால், பல்வேறு காரணங்களால் இயற்கை வளங்கள் அழிந்து போகின்றன.*

2013 மே 8]

அதைத் தடுப்பதற்குண்டான நடவடிக்கையை அரசு எடுக்குமா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, HACA கமிட்டி இருக்கிறதென்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அந்த கமிட்டியின் பரிந்துரையின்பேரில்தான் அனுமதி வழங்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் M–sand கேரளாவிற்குக் கடத்தப்படுவதாகச் சொன்னார்கள். பட்டா நிலத்தில் 36 குவாரிகள் இருக்கின்றன. அவை அரசு அனுமதி பெற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதை நாம் தடை செய்கின்றபொழுது, அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவைப் பெற்று, மீண்டும் அந்தப் பணியைத் தொடங்கிக் கொண்டிருக்கின்றார்கள். கேரளா எல்லையிலே சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, இப்படிப்பட்ட செயல்கள் தடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படி ஏதாவது நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்கள் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து நமக்குத் தண்ணீர் வருவதில்லை. அவர்கள் நமக்கு எந்த ஆதரவும் தருவதில்லை. ஆனால், நம்முடைய கற்பாறைகளை உடைத்து அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அங்கே ஆற்றிலிருந்து மணல் எடுப்பதற்கும், கற்பாறைகளை உடைப்பதற்கும் அரசு தடை செய்திருக்கிறது. ஏன் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அவர்கள் மணலை எடுத்துச் செல்ல வேண்டும்? M–sand எடுத்துச் செல்ல வேண்டும்? இதற்குத் தடை விதிக்க அரசு முன்வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, M–sand–ஐத் தமிழகத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். யாராவது அப்படி அனுமதி பெற்றவர்கள், கேரள மாநிலத்திற்குக் கடத்திச் செல்வார்களேயானால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அங்கே சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காவல் துறையின் சார்பாகவும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின்மூலமாக கடத்தல் நடைபெறுவது தடுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களைவிட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, கடத்தல் நடைபெறுவது தடுக்கப்பட்டு, அபராதத் தொகை அதிகமாக வசூல் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'கேரளாவிலிருந்து தண்ணீர் தர மறுக்கின்றார்கள்; நாம் ஏன் இங்கிருந்து M–sand–ஐ அவர்களுக்குத் தர வேண்டும்' என்று கேட்டிருக்கின்றார்கள். கேரளாவிலே உங்களுடைய கட்சியின் ஆட்சிதான் நடைபெறுகின்றது. நீங்களும் அந்தக் கட்சியைச் சார்ந்தவர்தான். நீங்கள் அங்கே போராட்டம் செய்து, தமிழகத்திற்குத் தண்ணீர் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், M–sand–ஐ எடுத்துச் செல்லும்போது, அதுபற்றி எங்களுக்குத் தெரிவித்தால், மீண்டும் சொல்கின்றேன், உடனடியாக அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 435, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*